காரணத்தால் டீசல் அதிகமாகச் செலவாகிறது. டயர் தேய்மானம் அதிகமாக ஏற்படுகிறது. ஆகவேதான் அங்கே நஷ்டம் ஏற்படுகிறது என்பதை நான் குறிப்பிட்டேன். அங்கே உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் தனியாகப் பிரிக்கிற சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 558, திரு. அ. தேவராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

558—

புளியம்பாக்கம் கிராமத்தில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனைக் கட்டிடம்.

*4695—திரு. அ. தேவராஜ் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செய்யாறு தொகுதி, புளியம்பாக்கம் கிராமத்தில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனைக் கட்டிடப் பணி கடந்த ஓராண்டு காலமாக துவக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) செய்யாறு தொகுதி, புளியம்பாக்கம் கிராமத்தில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைக்க கட்டுமானப் பணிக்காக ஒப்பந்தங்கள் பெறப்பட்டு முடிவு எடுக்கப்பட்டுவிட்டது. கட்டுமானப் பணி உடனடியாக துவங்கப்பட உள்ளது.

(ஆ) கட்டுமானப் பணிகள் முடிந்து பணிமனைகள் இந்த நிதியாண்டின் முன்பாதியிலேயே செயல்படுத்தப்படும்.

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டிலேயே துவக்கப்படும் என்பது குறித்து அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மிக்க மகிழ்ச்சி. ஆனால் அந்த பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடம் பெரிய இடமாக இருப்பதால், அதிகமான இடம் உள்ளதாக

இருப்பதால் அந்த இடத்தில் பாடி பில்டிங் போன்றவை களையும், டையர் ரிட்ரீடிங் போன்றவைகளையும், செய்து கொடுத்தால் கிராமப்புறமாக உள்ள அந்தப் பகுதிக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆகவே நம்முடைய டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதைச் செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே எடுக்கப்பட்டிருக்கிற நிலத்தின் அளவு சுமார் 3 ஏக்கர் 45 சென்ட் தான். ஆகவே இந்தப் பணிமனைகள் அமைப்பதற்குத்தான் அது சாத்தியக்கூறாக இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் வருகிற நிதியாண்டில் கட்டுவதாகச் சொன்னதாகச் சொன்னார்கள். வருகிற நிதியாண்டின் முன் பகுதியிலேயே கட்டி முடிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய கோரிக்கையை ஏற்று தெரிவித்தமைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே எங்களுடைய பகுதியிலே அந்த பஸ்கள் பழைய பஸ்களாக ஓடிக்கொண்டிருப்பதால் டிரிப்புகள் அதிகமாக செல்லமுடியாமல் நின்றுவிடுகிறது. அதையும் புரட்சித் தலைவி அவர்கள் அரசு புதிய வண்டிகளாகக் கொடுக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் முதல்வர் பொறுப்பு ஏற்றபிறகு தமிழகத்திலே இருக்கின்ற, 6 ஆண்டுகளுக்கு மேலாக ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகளை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும் என்பதற்காக அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் அறிவுரை வழங்கி 1992 டிசம்பர் மாதத்திற்குள்ளே 'பழைய பேருந்துகள் தமிழகத்திலே எங்கேயும் இல்லை' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நிலையை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்க இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அதற்குள்ளே அத்தனையும் மாற்றி அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 559, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.